# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சக்திவலு வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

---

(2002, மாச்சு மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, மாச்சு மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 18.50 தபாற் செலவு : ரூபா 5.25

## 2002 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சக்திவலு வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ—ஒ. 16/2002

**சக்திவலுவழங்கல் குழுவொன்றை அமைத்துருவாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், குறித்தசில வேறு சட்டங்களின் கீழான தத்துவங்களைக் குழு பிரயோகிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சக்திவலு வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்). சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### அத்தியாயம் 1

### சக்திவலு வழங்கல் குழுவை அமைத்துருவாக்குதல்

**2.** (1) சக்திவலு வழங்கல் குழு என அழைக்கப்படவேண்டிய குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்). சக்திவலு வழங்கல் குழுவை அமைத்துருவாக்குதல்.

(2) குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) பதவிநிலை உறுப்பினர்கள் —

(i) திறைசேரிச் செயலாளர், இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ii) மின்சக்தி, மின்வலு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(iii) தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழிற் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(iv) இலங்கை மின்சார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார சபைத் தவிசாளர் ;

(v) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தவிசாளர் ;

(vi) இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(vii) தேசிய சக்திவலுப் பேரவையின் தவிசாளர்;

(viii) எட்டாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சக்திவலு ஒழுங்குபடுத்துநர் ;

(ஆ) கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டு, அமைச்சரால் நியமிக்கப்பட்ட கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் பிரதிநிதியொருவர்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரி யிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியைவிட்டு விலகினாலன்றி, அல்லது எடுத்துக்காட்டப்படும் காரணங் களுக்காக அவர், கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டதொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் குழுவானது, குழுவின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

## அத்தியாயம் II

## குழுவின் குறிக்கோள்களும் தத்துவங்களும் பணிகளும்

**3.** குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:— *குழுவின் குறிக்கோள்கள்.*

(அ) மின்சக்திவலுவினதும் பெற்றோலியத்தினதும் மற்றும் வேறு சக்திவலுவினதும் தேவைப்பாடுகளின் போதியளவிலான வழங்கலொன்றை உறுதிப்படுத்துதல்;

(ஆ) மின்சக்திவலு வழங்கீட்டையும், பெற்றோலிய வழங்கலையும், வேறு சக்திவலு மூலவளங்களின் பயன்பாட்டையும் ஒழுங்குபடுத்துதல்.

**4.** குழு பின்வரும் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் :— *குழுவின் தத்துவங்கள்.*

(அ) (i) மின்சாரத்தை ;

(ii) எல்லாவகையிலுமான பெற்றோலிய உற்பத்திப் பொருட்களைக்

கொள்வனவு செய்தல் அல்லது வேறு வகையில் அவற்றைக் கையாளுதல் ;

(ஆ) எல்லா வகையிலான புதுப்பிக்கத்தகு சக்திவலு மூலவளங்களையும் ஏதேனும் முறையில் கையாளுதல் ;

(இ) மின்சார அளவுமானிகள் போன்ற அத்தகைய துணை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் அல்லது வேறு வகையில் கையாளுதல் ;அத்துடன் தனியார் துறையால் அத்தகைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கான திட்டங்களைத் தயாரித்தல் ;

(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை மின்சார சபையினதும் தொழிற்பாடுகளின் எல்லா அம்சங்களினதும் ஆகுசெலவின் பயனுறுதியை உறுதிப்படுத்துதல் ;

(உ) சக்திவலுவைப் பேணிக்காத்தலும் ஏனைய சக்திவலு மூலவளங்களை மேம்படுத்தலும் ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வழிவகைகளையும் மேற்கொள்ளுதல்.

குழுவின் பணிகள்.

5. குழு அதன் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்குப் பின்வரும் பணிகளைப் புரியலாம் :

(அ) போதியளவிலான சக்திவலு வழங்கலொன்றை உறுதிப்படுத்துவதற்குத் தேசிய திட்டமொன்றைத் தயாரித்தல் ;

(ஆ) மின்சக்திவலுவினதும் பெற்றோலியத்தினதும் கிடைக்கும் தன்மை மீதான விரிவான கூற்றொன்றையும், அத்தகைய மின்சக்திவலுவினதும் பெற்றோலியத்தினதும் பாவனைக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றையும் தயாரித்தல் ;

(இ) உரிமமளித்தல், ஒழுங்குபடுத்துதல் அத்துடன் பரிசோதனை தொடர்பிலான இச்சட்டத்தின் கீழான பணிகளைப் புரிதல் ;

(ஈ) இலங்கை அரசாங்கத்திற்கு –

(i) மின்சக்திவலுவின் பிறப்பாக்கல், கடத்துகை, விநியோகம், வழங்கல் மற்றும் பாவனை ;

(ii) பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல்,

என்பன தொடர்பான எல்லாக் கருமங்கள் மீதும் மதியுரை வழங்குதல்,

(உ) மின்சக்திவலுவின் பிறப்பாக்கல், கடத்துகை, விநியோகம், வழங்கல், பாவனை அத்துடன் பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் விநியோகம், வழங்கல் மற்றும் பாவனை தொடர்பான தகவலைச் சேகரித்தலும் பதிவு செய்தலும்,

(ளா) (i) இலங்கை மின்சாரசபையை அல்லது மின்சாரத்தின் பிறப்பாக்கல் கடத்துகை, விநியோகம், வழங்கல், பாவனை என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டத்தால் பதவி பெயர் குறிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அதிகாரசபையையும் ;

(ii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அல்லது பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டத்தால் பதவி பெயர் குறிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு அதிகாரசபையையும்,

மேற்பார்வை செய்தலும் அவற்றிக்குப் பணிப்புரைகள் வழங்குதலும் ;

(எ) (i) மின்சாரத்தின், பிறப்பாக்கல் கடத்துகை, விநியோகம், வழங்கல் மற்றும் பாவனை ;

(ii) பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல்,

ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்களின் அத்தகைய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்.

(ஏ) இயலுமானவரை —

(i) மின்சாரத்தின் தடங்கலற்ற பிறப்பாக்கல் கடத்துகை, விநியோகம், மற்றும் வழங்கல் ;

(ii) பெற்றொலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் தடங்கலற்ற இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல் ;

என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடிய வாறான அத்தகைய வழிவகைகளை மேற்கொள்ளுதல் ;

(ஐ) மின்சார வழங்கலுக்கான கட்டணங்களையும் வேறு இறுப்பனவுகளையும் காலத்துக்குக்காலம் நிர்ணயித்தலும் ஒழுங்குபடுத்துதலும் ;

(ஒ) (i) மின்சாரத்தின் பிறப்பாக்கல், கடத்துகை, விநியோகம் மற்றும் வழங்கல் என்பன தொடர்பிலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் வினைத்திறனும் சிக்கனமும் பாதுகாப்பும் ஊக்குவிக்கப்படுவதன் மூலம் மின்சாரத்தினதும் ;

(ii) பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல் என்பன தொடர்புடைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் வினைத்திறனும் சிக்கனமும் பாதுகாப்பும் மேம்படுத்தப்படுவதன் மூலம் பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் .

வழங்கல் தொடர்பில் பாவனையாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் ;

(ஓ)(i) மின்சாரத்தின் பிறப்பாக்கல், கடத்துகை, விநியோகம் மற்றும் வழங்கல் என்பன தொடர்பிலான வர்த்தக ஒழுங்கமைப்புக்களில் ஈடுபட்டுள்ள ஆட்கள் தொழிற்பாட்டிற்குத் திறமையுடன் நிதியளிப்பு செய்து அத்தகைய செயற்பாடுகளை தொழிற்படுத்துதலையும் ;

(ii) பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல் என்பன தொடர்பிலான வர்த்தக ஒழுங்கமைப்புகளில் ஈடுபட்டுள்ள ஆட்கள் செயற்பாட்டிற்குத் திறமையுடன் நிதியளித்தலும் அத்தகைய செயற்பாடுகளைத் தொழிற்படுத்துதலையும்,

நிலைநாட்டுதலும் உறுதிப்படுத்தலும் வேண்டும்.

(ஔ)(i) மின்சாரத்தின் பிறப்பாக்கல், கடத்துகை, விநியோகம் மற்றும் வழங்கல் ;

(ii) பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம் மற்றும் வழங்கல்,

என்பவற்றினின்றெழும் ஆபத்துக்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான, அத்தகைய வழிவகைகளை மேற்கொள்ளுதல் ;

(க) மின்சாரத்தினதும் பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் திறமையான பாவனையையும் பேணிக்காத்தலையும் மேம்படுத்தல்;

(ங) மின்சாரத்தையும் ஏனைய வகையினவான மின்சக்தி வலுவையும், பிறப்பாக்கி உற்பத்தி செய்வதற்கான, வழிமுறைகளையும் மாற்றுமுறைகளையும் மற்றும் சிக்கனமான மூலவளங்களையும் அறிமுகப்படுத்துவதனையும் பயன்படுத்துவதனையும் மேம்படுத்தல்;

(ச) குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாயிருக்கக் கூடியவாறானவையும், அல்லது உகந்தனவாகவிருக்கக்கூடியவாறானவையும் அமைச்சரவையினால் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றவையுமான வேறெவையேனும் செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல் ;

(ஞ) இச்சட்டத்தின்கீழான அதன் பணிகளுள் எதனையும் பயனுற நிறைவேற்றுவதற்கு அவசியமானவையும், தோதானவையுமெனக் குழு கருதுகின்றவாறான அத்தகைய எல்லா இடைநேர்விளைவான மற்றும் துணைநிலையான செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல்.

குழு அமைச்சரின் பணிப்பின்கீழ் அதனது தத்துவங்களைப் பிரயோகித்தல்.

6. குழுவானது, அதனுடைய தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், பணிகளைப் புரிவதிலும் அரசாங்கத்தின் சக்திவலுக் கொள்கை அமுலாக்கம் தொடர்பில் அமைச்சரினால் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் விசேட அல்லது பொதுவான பணிப்புடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

குழுவினால் வரையப்படும் திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் இலங்கை மின்சார சபையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் செயற்படுத்துதல்.

7. வேறேதேனும் சட்டத்தில் முரணானது எது எப்படியிருப்பினும் குழுவின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின்கீழ் குழுவினால் வரையப்படும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துவது, விடயத்துக்கேற்ப, இலங்கை மின்சார சபையினதும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் கடமையாதல் வேண்டும்.

## அத்தியாயம் III

### குழுவின் பணியாட்டொகுதி

சக்திவலு ஒழுங்குபடுத்துநர்.

8. (1) அமைச்சர், குழுவின் விதப்புரையின்மீது, குழுவின் சக்திவலு ஒழுங்குபடுத்துநராக ஆளொருவரை நியமிக்கலாம் ; அவர் குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) சக்திவலு ஒழுங்குபடுத்துநராக நியமிக்கப்படவேண்டிய எவரேனுமாள் கொண்டிருக்கவேண்டிய தகைமைகளையும், அத்தகைய ஆள் எந்த நியதி, நிபந்தனைகளுக்கமைய நியமிக்கப் படலாமோ, அந்த நியதி, நிபந்தனைகளையும், அத்தகைய ஒழுங்குபடுத்துநருக்குச் செலுத்தப்படக்கூடிய சம்பளத்தையும் வேறு படிகளையும், அமைச்சரவையானது தீர்மானித்தல் வேண்டும்.

(3) குழு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களை அது, சக்திவலு ஒழுங்குபடுத்துநருக்குக் கையளித்தல் வேண்டும்.

(4) சக்திவலு ஒழுங்குபடுத்துநர், அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம், குழுவின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆளின் சேவைகள் பெறப்பட்டுள்ளனவோ அந்த எவரேனும் ஆளுக்கு, இச்சட்டத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட அல்லது தம்மீது சுமத்தப்பட்ட அல்லது தமக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஆள், சக்திவலு ஒழுங்குபடுத்துநரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

9. (1) அமைச்சரவையானது, குழுவின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் — *குழுவின் ஏனைய பணியாட்டொகுதி.*

(அ) தகைமைகளைத் தீர்மானித்து, ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை வகுத்தமைத்தல் வேண்டும் ;

(ஆ) நியதி, நிபந்தனைகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) குழுவானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அமுலாக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள், குழுவிற்கு உரித்தாதலும் வேண்டும்.

10. குழுவின் வேண்டுகோளின்பேரில், விடயத்துக்கேற்ப, இலங்கை மின்சார சபையின் அல்லது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலரின் அல்லது சேவையாளரின் சேவைகள், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, குழுவினாலும் அத்தகைய அலுவலரினால் அல்லது சேவையாளராலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறான, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது குழுவுக்குக் கிடைக்கக்கூடியன வாக்கப்படலாம். *விடயத்துக்கேற்ப இலங்கை மின்சார சபையின் அல்லது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவைகள் குழுவுக்குக் கிடைக்கக்கூடியன வாக்கப்படுதல்.*

## அத்தியாயம் IV

### பொதுவானவை

11. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவுள்ள ஆதனம் தேவைப்படுகின்றவிடத்து, நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், (இதனகத்துப்பின்னர் "தேவைக்கெடுத்தற் கட்டளை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கட்டளையொன்றின்மூலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தேதியிலிருந்து, அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்ற அசைவுள்ள ஆதனத்தைத் தேவைக்கெடுக்கலாம். *அசைவுள்ள ஆதனத்தைத் தேவைக்கெடுத்தல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் தேவைக்கெடுத்தற் கட்டளையொன்று, அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்ற ஆதனத்தின் உடைமையை எடுப்பதற்கும், சட்டத்தின் நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தைப் பயன்படுத்துவதற்காக குழுவுக்குக் கையளிப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரமளிக்கின்ற பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செயலாளரினால் தேவைக்கெடுக்கப்படும் ஏதேனும் ஆதனம், (இதனகத்துப்பின்னர் "தேவைக்கெடுக்காதுவிடுதற் கட்டளை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) செயலாளரினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலம், தேவைக்கெடுக்காதுவிடுதற் கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய தேதியிலிருந்து தேவைக்கெடுக்காது விடப்படலாம்.

(4) (அ) உட்பிரிவு (1) இன்கீழ் தேவைக்கெடுக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனம் தொடர்பிலான இழப்பீடு, திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.";

(ஆ) பந்தி (அ)வின் ஏற்பாடுகளின் நியதிகளில் செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் மதிப்பீடும் அத்தகைய இழப்பீட்டுத்தொகை வழங்கப்படும் முறையும், விதித்துரைக்கப்பட்ட வாறு இருத்தல் வேண்டும்.

அரசின் அசைவற்ற ஆதனம் குழுவுக்குக் கிடைக்கக் கூடியதாக்கப் படுதல்.

**12.** அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம், குழுவின் ஏதேனும் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்நோக்கத்துக்காக அத்தகைய காணியின் ஒரு விசேட மானியக்கொடை அல்லது குத்தகை அளிக்கப்படலாமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், குழுவுக்கு அளிக்கப்படும் அத்தகைய ஆதனத்தின் ஒரு விசேட மானியக்கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**13.** இச்சட்டத்தின்கீழ் அல்லது குழுவின் பணிப்பின்மீது குழுவின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது செய்யாமைக்காக குற்றவழக்கு எதுவும் அவருக்கு எதிராகத் தொடுக்கப்படுதலாகாது.

இச்சட்டத்தின் கீழ் அல்லது குழுவின் பணிப்பின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

**14.** (1) சக்திவலு ஒழுங்குபடுத்துநர், குழுவின் தத்துவங் களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும், குழுவிற்காகவும் அதன் சார்பிலும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பந்தங்கள் கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவொன்று என்றாற்போன்று குழுவினால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

ஒப்பந்தங்களும் வழக்குகளும்.

(2) அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் அல்லது அதன் பணிகளைப் புரிதல் தொடர்பான எல்லா வழக்குகளும் கூட்டிணைக்கப்பட்ட குழு என்றாற்போன்று, குழுவினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

**15.** குழுவானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங் கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் குழுவானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

**16.** அமைச்சர், காலத்துக்காலம், குழுவின் வேலை தொடர் பிலான விபரத்திரட்டுக்களையும், கணக்குகளையும், வேறு தகவலையும் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தமக்குக் கொடுத்துதவுமாறு குழுவைப் பணிக்கலாமென்பதுடன், குழுவானது அத்தகைய ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

அமைச்சருக்குத் தகவலைக் கொடுத்துதவுதல்.

**17.** இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற அல்லது அதன்கீழ் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு அல்லது அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தவறு.

தவறுக்கான தண்டம்.

**18.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் எவரேனுமாள், நீதிவானொருவரினாலான சுருக்க முறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைத் தீர்ப்புக்கு, அல்லது ஒரு கோடி ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு, அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றி னால் புரியப்படுமிடத்து, அப்போது –

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாகவிருப்பின், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும் ;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாக இருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் ஒருவர், அத்தகைய தவறு, பணிப்பாளரின், அலுவ லரின் அல்லது பங்காளியின் அறிவுடன் புரியப்படவில்லை யென்றும், அல்லது பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளர் அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக்கவனஞ் செலுத்தினாரென்றும் பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளர் எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

ஒழுங்குவிதிகள்.

**19.** (1) அமைச்சரானவர், எக்கருமங்கள் விதித்துரைக் கப்படவேண்டுமெ‌ன இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப் பட்டுள்ளனவோ, அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின் றனவோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதி களை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எதேனும் தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :–

(அ) சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகவுள்ள மின்சக்திவலு, பெற்றோலியம் மற்றும் ஏனைய சக்திவலு மூலவளங்கள் என்பவற்றின் போதிய, தடங்கலற்ற வழங்கலுக்காக ஏற்பாடு செய்தல் ;

(ஆ) சக்திவலுக் கருத்திட்டங்களின் பாதுகாப்புக்காகப் பின்பற்றப்படவேண்டிய நிபந்தனைகள் ;

(இ) மின்சக்திவலுவினைப் பேணிப்பாதுப்பதற்கும், அதன் பயன்பாட்டுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிவகைகள் பயன்பாடும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வொன்றும் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

குழுவின் அறிக்கை அமைச்சருக்கு அனுப்பப்பட்டு பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதலும், அத்தகைய அறிக்கையின் பிரதிகள்

**20.** (1) குழுவானது, குழுவின் ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவுக்குப் பின்னர் இயன்றவரை விரைவாக, அவ்வாண்டின் போது குழுவானது அதன் திட்டம், நிகழ்ச்சித்திட்டம் என்பன மீது அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தல் பற்றியும் புரிதல் பற்றியும் அறிக்கையொன்றை அமைச்சருக்குக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும். ஏதேனும் ஆண்டிற்கான அத்தகைய அறிக்கை, ஏதேனும் ஆண்டின்போது குழுவுக்கு

*பொதுமக்களினாற் கொள்வனவு செய்யப்படுவதற்காகக் கிடைக்கக் கூடியனவாக்கப் படுதலும்.*

அமைச்சரினால் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்பை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(2) குழுவானது, அத்தகைய அறிக்கையை அமைச்சருக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் அறிக்கையைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதலும் வேண்டும்.

(3) குழுவானது, குழுவின் அறிக்கையினைக் குழுவின் செலவில் அச்சிடச்செய்தலும், குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டிய அத்தகைய விலையில் பொதுமக்களினால் கொள்வனவு செய்யப்படுவதற்காகக் கிடைக்கக்கூடிய தாக்கப்படச் செய்தலும் வேண்டும்.

*புதிய சக்தி வலுக் கருத்திட்டத்தை அங்கீகரிக்கு முன்னர், அமைச்சர், மத்திய சூழல் அதிகார சபையிடமிருந்து அறிக்கையைப் பெறுதல்.*

**21.** (1) குழுவானது, –

(i) மின்சக்திவலுவின் பிறப்பாக்கல், கடத்துகை, விநியோகம் அல்லது வழங்கல் ;

(ii) பெற்றோலியத்தினதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும், இறக்குமதி, ஏற்றுமதி, களஞ்சியப் படுத்தல், விநியோகம் அல்லது வழங்கல்,

என்பன தொடர்பான ஏதேனும் கருத்திட்டத்துக்கான அங்கீகாரத்தை அளிக்குமுன்னர், உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தின் சூழல் தாக்கங்கள் பற்றி, தேசிய சூழற் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையிடமிருந்து அறிக்கையொன்றைப் பெறுதல் வேண்டும்.

(2) குழுவானது அமைச்சரின் ஆலோசனையின் பின்னரும், மத்திய சூழல் அதிகார சபையின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டும், (1) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்திற்காக அங்கீகாரம் அளித்தல் வேண்டும்.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட எதுவும் குறித்த சில சட்டங்கள் மேலோங்கியிருத்தல்.*

**22.** பிரிவு 21இன் ஏற்பாடுகளுக்கமைவாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட எதுவும் தொல்லைகள் கட்டளைச் சட்டத்திலும் தேசிய சூழல் சட்டத்திலும் தண்டனைச் சட்டக்கோவையின் 261ஆம் பிரிவிலும், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 98 ஆம் பிரிவிலும் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும் பயன்கொண்டதாதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தினதும் மேற்சொல்லப்பட்ட சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை உள்ளவிடத்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க மேலோங்கியிருத்தல் வேண்டும்.

## பாகம் II

### வேறு சட்டங்களின் கீழான தத்துவங்களின் பிரயோகம்

இலங்கை மின்சாரசபை சட்டத்தின் பாகம் V இன் கீழான தத்துவங்களைக் குழு பிரயோகித்தல்.

**23.** காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான, இலங்கை மின்சார சபைச்சட்டத்தின் பாகம் V இல் குறித்துரைக்கப் பட்டுள்ள கட்டணங்களும் வேறு இறுப்பனவுகளும் தொடர்பிலான தத்துவங்கள், இலங்கை மின்சார சபைச் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க குழுவினால் பிரயோகிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மின்சாரசபையானது இச்சட்டம் நடைமுறையில் உள்ள வரைக்கும், அப்பாகத்தின் கீழ் ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகித்தலுமாகாது. அத்துடன் அப்பாகத்தில் அல்லது அப்பாகத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் அல்லது கட்டளையில் "சபை" என்பதற்கான குறிப்பீடு எதுவும் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலன்றி "குழு" என்பதற்கான குறிப்பீடு ஒன்றென்றாற் போன்று வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

மின்சாரச் சட்டத்தின் 2 முதல் 11 வரையிலான பிரிவுகளின் கீழான குழு தத்துவங்களைப் பிரயோகித்தல்.

**24.** (1) காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான மின்சாரச் சட்டத்தின் 2 முதல் 11 வரையிலான பிரிவுகளின்கீழ் மின்சக்தி வலு வழங்கல் தொடர்பில் உரிமமளித்தல் தொடர்பிலான தத்துவங்கள், சொல்லப்பட்ட மின்சாரச் சட்டத்தில் முரணாக வுள்ளது எது எப்படியிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியி லிருந்தும் அதன் பின்னரும் சொல்லப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க குழுவினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அமைச்சர், இச்சட்டம் நடைமுறையில் உள்ள வரை, அப்பிரிவுகளின்கீழ் தத்துவம் எதனையும் பிரயோகித்தலாகாது. அத்துடன் அப்பிரிவுகளில் அல்லது அப்பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் "அமைச்சர்" எனபதற்கான ஏதேனும் குறிப்பீடு, சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி "குழு" என்பதற்கான குறிப்பீடு ஒன்றென்றாற்போன்று வாசித்துப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

(2) குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழான அதன் தத்துவங்களை, அமைச்சரின் விசேட அல்லது பொதுவான பணிப்புக்கு அமைய பிரயோகித்தல் வேண்டும்.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்கள் குழுவினால் பிரயோகிக்கப்படல்.

**25.** பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின்கீழான தகுதி வாய்ந்த அதிகாரியின் தத்துவங்களும் பணிகளும், சொல்லப்பட்ட பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்கு படுத்தலும் கட்டுப்படுத்தலும்) சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும், அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க குழுவினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சட்டம் நடைமுறையில் உள்ள வரை அச்சட்டத்தின் கீழ் தத்துவங்கள் எதனையும் பிரயோகித்தலாகாது, அத்துடன் அச்சட்டத்தில் அல்லது அச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பதற்கான குறிப்பீடு எதுவும் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி "குழு" என்பதற்கான குறிப்பீடு ஒன்றென்றாற்போன்று வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5ஆ முதல் 5ஐ வரையும் 34அ, 42 என்னும் பிரிவுகளின்கீழ் விடயத்துக்கேற்ப, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அமைச்சரினால் அல்லது பணிப்பாளர் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களும் உரிமைகளும் குழுவினால் பிரயோகிக்கப்படல்.

**26.** குழுவானது, அதன் பணிகளை உரியமுறையில் புரிவதில், அவ்வாறு செய்தல் அவசியமானதும் உசிதமானது எனக் கருதுகின்றவிடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் —

(அ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு, 5ஆ, 5இ, 5ஈ அத்துடன் 34அ என்னும் பிரிவுகளின்மூலம் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பிரயோகிக்கலாம் ; அல்லது

(ஆ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 5ஆ, 5உ, 5ஊ, 5எ, 5ஏ, 5ஐ மற்றும் 42 என்னும் பிரிவுகளின்கீழ் விடயத்திற்கேற்ப, அமைச்சருக்கு அல்லது பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுள் அல்லது விசேட தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டதைப் பிரயோகிக்கலாம்,

என்பதுடன், அத்தகைய உரிமைகளை அல்லது தத்துவங்களை குழுவானது பிரயோகிக்குமிடத்து, விடயத்திற்கேற்ப கூட்டுத்தாபனம் அல்லது அமைச்சர் அல்லது பணிப்பாளர்கள்

சபையானது. இச்சட்டம் நடைமுறையில் உள்ளவரைக்கும் அப்பிரிவுகளின்கீழ் தத்துவம் எதனையும் பிரயோகித்தலாகாது. அத்துடன் அப்பிரிவுகளில் விடயத்திற்கேற்ப "கூட்டுத்தாபனம்", "பணிப்பாளர்கள் சபை" அல்லது 'அமைச்சர்' என்பவற்றிற்கான குறிப்பீடு எதுவும் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலன்றி "குழு" என்பதற்கான குறிப்பீடு ஒன்றென் றாற்போன்று வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

விசேட பணிப்புக்களை வழங்கு வதற்கான தத்துவம்.

**27.** (1) இலங்கை மின்சார சபைச் சட்டம், மின்சாரச் சட்டம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், மற்றும் பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்), சட்டம் என்பவற்றில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், குழுவானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் —

(அ) இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை மின்சார சபைக்கும் அத்தகைய சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளருக்கும் ;

(ஆ) மின்சாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வழங்கப் பட்ட ஏதேனும் உரிமத்தை வைத்திருப்பவருக்கும்;

(இ) பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் அல்லது அப்பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட பெற்றோலிய கட்டுப்பாட்டாளருக்கும் எவரே னும் பிரதிப் பெற்றோலியக் கட்டுப்பாட்டாளருக்கும் அல்லது எவரேனும் உதவிப் பெற்றோலியக் கட்டுப்பாட்டாளருக்கும் ; அத்துடன்

(ஈ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவ லருக்கும் சேவையளாருக்கும் ;

விடயத்திற்கேற்ப, 23, 24, 25 அல்லது 26 என்னும் பிரிவுகளின்கீழான குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய விசேட பணிப்புக்களை வழங்குவதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணிப்புக்கள் வழங்கப்பெற்றுள்ளவரான ஆள் எவரும் அத்தகைய பணிப்புக் களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய விசேட நடவடிக்கைமுறை.

**28.** (1) இலங்கை மின்சார சபைச் சட்டத்தில் அல்லது மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்துகொள் ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும் குழுவானது, தேசிய பொருளாதாரத்தின் அக்கறையில் குழுவின் தத்துவங் களையும், உரிமைகளையும் வினைத்திறமையாகப் பிரயோகிப் பதற்கான உசிதமான வழிவகைகளை எடுப்பதற்கென கருத்திற் கொண்டும், கட்டணங்களையும், வேறு இறுப்பனவுகளையும் விதிப்பனவு தொடர்பிலான விசேட நடபடிமுறை எடுப்பதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) கட்டணங்களதும், வேறு இறுப்பனவுகளதும் விதிப்பனவு தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய விசேட நடபடிமுறை விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் காலவரையறை.

**29.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருட காலப்பகுதியொன்றிற்கு நடைமுறையிலி ருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**30.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**31.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"இலங்கை மின்சாரச் சட்டம்" என்பது. (205 ஆம் அத்தியாயமான) இலங்கை மின்சாரச் சட்டம் எனப் பொருள்படும் ;

"இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்" என்பது. 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க. இலங்கை மின்சாரச் சபைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்" என்பது. 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் எனப் பொருள்படும் ;

"குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்" என்பது. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"மின்சக்தி வலு" என்பது. செய்தியொன்றைக் கடத்துதல் தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்திற்காகப் பிறப்பாக்கப்படும்போது. கடத்தப்படும்போது. வழங்கப்படும்போது அல்லது பயன்படுத்தப்படும்போது உள்ள சக்திவலு எனப் பொருள்படும் ;

"அமைச்சர்" என்பது. மின்சக்தி மின்வலு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் எனப்பொருள் படும்.

"தேசிய சூழற் சட்டம்" என்பது. 1980 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க. தேசிய சூழற் சட்டம் எனப் பொருள்படும் ;

"தொல்லைகள் கட்டளைச் சட்டம்" என்பது. (230 ஆம் அத்தியாயமான) தொல்லைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"தண்டனைச் சட்டக்கோவை" என்பது. (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை எனப் பொருள்படும் ;

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவை உள்ளடக்கும் ;

"பெற்றோலியம்" என்பது பெற்றோலியம் என்று பொருளாவதோடு ஐதரோகாபன்கள் அல்லது ஐதரோகாபன் கூட்டுப்பொருட்கள் அல்லது ஏதேனும் அசேதன அல்லது இயற்கையான அல்லது செயற்கையான சேதனக் கூட்டுப்பொருட்கள் அல்லது கலவை என்பவற்றிலிருந்து பெறப்படக்கூடிய, கொள்வனை செய்யப்படக்கூடிய, தயாரிக்கப்படக்கூடிய, அபிவிருத்தி செய்யப்படக்கூடிய, கலக்கப்படக்கூடிய, ஆக்கப்படக்கூடிய, அல்லது உற்பத்தி செய்யப்படக்கூடியதும் தாவர அல்லது விலங்குப் பீடையின் செயற்பாட்டை அழிக்கும், தடைசெய்யும் அல்லது கட்டுப்படுத்தும் அல்லது பங்கசு வளர்ச்சியை அழிக்கும், தடைசெய்யும் அல்லது கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக எத்தன்மைத்தான விவரணத்தையும் சார்ந்த கமத்தொழில் இரசாயனப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுவதற்கும் தாவர வாழ்வின் உற்பத்திப்பெருக்கத்தையும் தரத்தையும் அதிகரிப்பதற்கும் எனப் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்பட்டு வருகின்ற அல்லது பயன்படுத்தப்படக் கருதப்பட்டுள்ள ஏதேனும் பொருளை அல்லது துணைப்பொருளை உள்ளடக்கும்.

"பெற்றோலிய உற்பத்திப்பொருள்" என்பது, பெற்றோல், மண்ணெண்ணெய், தன்னியக்க டீசல், பாரிய டீசல், உலை எண்ணெய், திரவ பெற்றோலிய வாயு, அல்லது விமானச்சுழல் காற்றாடி எரிபொருள் எனப் பொருள்படும்.

"பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும்) சட்டம்" என்பது 1979 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும்) சட்டம் எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.